# உயர்தர வகுப்பு மாணவர்களின் வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர்சார் காரணிகள்

**K. Rajkumar[1*] and R. Sharveswara[2]**

[1]*Faculty of Graduate Studies, University of Jaffna, Sri Lanka*

[2]*Department of Education, Faculty of Arts, University of Jaffna, Sri Lanka*

**ஆய்வுச் சுருக்கம்**

பாததும்பர கோட்ட தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் உயர்தர வகுப்பு மாணவர்களின் வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர்சார் காரணிகளை ஆராயும் பொருட்டு அளவறிசார் ஆய்வு அணுகுமுறையில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டது. இக் கோட்டத்தில் க.பொ.த உயர்தர வகுப்பில் கற்கும் 450 மாணவர்களுள் 181 மாணவர்கள் படையாக்கப்பட்டு எழுமாற்று மாதிரி எடுப்பு அடிப்படையில் ஆய்வுக்கான மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து தரவுகளை பெற்றுக்கொள்ள தரவுசேகரிப்புக் கருவியாக வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டது. சேகரிக்கப்பட்ட தரவுகளை விபரணப் புள்ளிவபரவியல் மற்றும் அனுமானப் புள்ளிவிபரவியல் நுட்பங்களைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டது. மாணவர்களின் வாரத்திற்கான வரவுப்போக்கானது உயர்நிலையில் காணப்படுவதுடன் ($M$ = 3.76, $SD$ = 0.812) இரண்டாம்நிலைத் தரவுகளுடன் இதனை ஒப்பீடு செய்தபோது வாராந்த சராசரி வரவு 3 தொடக்கம் 4 நாள்கள் என கண்டறியப்பட்டது. வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுக்கிடையிலான தொடர்புகளை சோதனை செய்தபோது (Correlations) தனியார் வகுப்புக்கள் - சமூக வலைத்தளப் பாவனை ($r$ = .26), தனியார் வகுப்பு - வேலைக்கு செல்லல் ($r$ = .17), வேலைக்குச் செல்லல் - சமூக வலைத்தளங்கள் ($r$ = .15), அதிகாலைஎழுதல் - சமூகவலைத்தளப்பாவனை ( $r$ = .18 ), ஆகிய காரணிகளிடையே பொருண்மையான நேர்த்தொடர்பும் இருப்பது வெளிப்படுத்தப்பட்டது. மாணவர்களின் வரவில் செல்வாக்குச் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளான தனியார் வகுப்புக்குச் செல்லல், வேலைக்குச் செல்லல், அதிகாலை எழுந்திருப்பதில் சிரமம் ஆகிய காரணிகளின் இடைப்பெறுமானமானது அவர்களின் பாலினத்தோடு பொருண்மையான வேறுபாட்டைக் காட்டுவதோடு உடல்நலப் பிரச்சினை, சமூக வலைத்தளங்களின் பாவனைக் காரணிகளில் பொருண்மையான வேறுபாடு காணப்படவில்லை. Multiple Regression Analysis மூலம் தனியார் வகுப்புக் காரணிகள் ($B$ = - .160, $p$ < . 05) வரவு வீதத்தில் பொருண்மையான எதிர் மறையான தாக்கம் செலுத்துவது கண்டறியப்பட்டதுடன் ஏனைய காரணிகள் ( $p$ > .05 ) பொருண்மையான தாக்கத்தை செலுத்தவில்லை. இவ் ஆய்வு தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களின் பாடசாலை வருகைவீதத்தையும் ஏனைய பாடசாலை செயற்பாடுகளையும் பாதிக்காத வகையில் தமது நேர அட்டவணைகளைத் திட்டமிடல் வேண்டும் என்பதுடன் அரசாங்கம் பொருத்தமான கல்விக் கொள்கைகளை வகுத்தல், சமூக வலைத்தளங்களின் பாவனையால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாதவாறு வழிகாட்டல்-ஆலோசனை வழங்கல் மற்றும் பாடசாலை அடிப்படையிலான சுகாதார செயற்பாட்டு அமைப்புகளை நடைமுறைப்படுத்தல் போன்றவை பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

**முதன்மைப் பதங்கள்:** மாணவர்சார் காரணிகளின் செல்வாக்கு, உயர்தர வகுப்பு மாணவர்கள், வரவுவீதம்

*rajkumarr082@gmail.com

**அறிமுகம்**

கல்விப்புலத்தில் மாணவர்களின் பாடசாலை வரவு வீதம் என்பது அவர்களின் கல்வி அடைவு மட்டத்தைத் தீர்மானிக்கும் ஒரு முக்கிய காரணியாகும் (Gottfried, 2014; UNESCO, 2015). தற்போதைய கல்விச் சூழலில் உயர்தர வகுப்பு மாணவர்களிடையே பாடசாலை வரவின்மை என்பது ஒரு குறிப்பிடத்தக்க சவாலாகவுள்ளது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பெற்றோர் - ஆசிரியர் சந்திப்புகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் மாணவர்களின் வரவு வீதத்தில் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் அரசியலமைப்பு சட்டம் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை உறுதி செய்திருந்தாலும் நாட்டின் சகல பகுதிகளிலும் மாணவர்களின் பாடசாலை வரவின்மை ஒரு தொடர்ச்சியான சவாலாக இருந்து வருகின்றமையினை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. இது மாணவர்களின் கல்வி அடைவுக் குறைவு, இடைவிலகல் அதிகரிப்பு மற்றும் அவர்களின் எதிர்கால வாய்ப்புகள் மீது கணிசமான எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தல் என்றவாறு பின்னடைவான நிலையை உருவாக்கியுள்ளது. கண்டி மாவட்டம் இலங்கையின் மத்திய மலைநாட்டில் அமைந்துள்ள ஒரு முக்கியமான நிர்வாகப் பிரிவு ஆகும். பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார பின்னணிகளைக் கொண்ட மக்கள் இப்பகுதியில் வசிக்கின்றனர். மாணவர் வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் சிக்கலானதாகவும் பல்வகைப்பட்டதாகவும் இருக்கின்றன. வறுமை, மாணவர்களின் உடல் நலப் பிரச்சினைகள், பொருளாதாரம் போன்ற காரணங்கள் மாணவர்களின் வரவின்மையில் செல்வாக்குச் செலுத்துகின்றன (Sahin, 2016).

மாணவர்களின் வரவினை அதிகரித்தல் மற்றும் பாடசாலை நேரத்தில் ஆசிரியர்களால் நிதி அறவீடு செய்து பிரத்தியேக வகுப்புக்களில் கற்பிப்பதனை தடுத்தல் என்பவை தொடர்பில் கல்வி அமைச்சு கவனம் எடுத்துள்ளது. அமைச்சின் சுற்றுநிருபங்களுக்கு அமைவாக பாடசாலைக்கல்வி மூலம் மாணவர்களது முழு ஆளுமையினையும் கட்டியெழுப்பும் நோக்கிற்கு எதிராக பாடசாலை நேரத்தில் பாடசாலைக்கு வெளியே நடைபெறுகின்ற மேலதிக பிரத்தியேக வகுப்புகளுக்கு மாணவர்கள் கலந்து கொள்ள நிர்ப்பந்திக்கப்படும் சூழ்நிலைகள் உள்ளன. அதுமட்டுமன்றி அரசசேவையின் கீழ் நியமனம் பெற்று ஆசிரியராக கடமைபுரிகின்ற ஒரு சில ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தில் அரசு தமக்கு அளிக்கின்ற அரச கடமைகளில் கவனம் செலுத்தாது நிதி அறவீடு செய்து பிரத்தியேக வகுப்புக்களை நடாத்துவதாக பொதுவான குற்றச்சாட்டுள்ளது.

உயர்தர வகுப்பு மாணவர்களின் பாடசாலை வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர் சார் தனியாள் காரணிகளில் பாடசாலை நேரத்தில் தனியார் வகுப்புகளுக்கு கலந்து கொள்வதால் பாடசாலை வரவின்மையில் ஏற்படும் பாதிப்பை கல்வி அமைச்சின் சுற்றுநிருபம் மேலும் உறுதிப்படுத்துகின்றது (MOE, 2005).

அதேநேரம் அதிக தூக்கமும் மாணவர்களின் வரவின்மைக்கான காரணங்களை வெளிப்படுத்துகின்றது (Schmulian & Coelzee, 2011). நாட்டின் பிரதமரும் கல்வி

அமைச்சருமான ஹருனி அமரசூரிய தேசிய கல்வி நிறுவகத்தில் 2025 பெப்ரவரி மாதம் நடைபெற்ற கலந்துரையாடலில், பிரதானமாக உயர்தர மாணவர்களின் பாடசாலை வரவுக்குறைவு தொடர்பாக கருத்துத்தெரிவித்ததுடன் மாணவர்களின் பாடசாலை வரவை அதிகரிப்பதற்கான செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார் (NIE, 2025). கீழே தரப்பட்ட அட்டவணை 1 2024 மற்றும் 2025 ம் ஆண்டுகளில் அய்வுக் குடித்தொகையின் சராசரி வரவு வீதத்தைக் காட்டுகின்றது.

**அட்டவணை 1**

*ஆய்வுக் குடித்தொகையின் சராசரி வரவு வீதம் 2024, 2025ம் ஆண்டு*

| பாடசாலைகளின் பெயர் | மாணவர்களின் எண்ணிக்கை | 2024 | 2025 |
|---|---|---|---|
| A | 339 | 51% | 55% |
| B | 13 | 61% | 59% |
| C | 33 | 68% | 65% |
| D | 65 | 64% | 62% |

**ஆய்வின் நோக்கமும் குறிக்கோள்களும்**

***ஆய்வு நோக்கம்***

பாததும்பர கோட்ட தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் பாடசாலை வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர்சார் காரணிகளை ஆராய்தல்.

***ஆய்வின் குறிக்கோள்கள்***

1. உயர்தர வகுப்பு மாணவர்களின் தற்போதைய வரவுவீதப் போக்கு எவ்வாறு உள்ளது என கண்டறிதல்.
2. உயர்தர வகுப்பு மாணவர்களின் வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர்சார் காரணிகளுக்கிடையிலான தொடர்புகளை ஆராய்தல்.
3. உயர்தர வகுப்பு மாணவர்களின் வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர்களின் குழுக்களுக்கிடையிலான வேறுபாடுகளை ஆராய்தல்.
4. உயர்தர வகுப்பு மாணவர்களின் வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர்சார் காரணிகளை கண்டறிதல்.

**இலக்கிய மீளாய்வு**

மாணவர்களின் பாடசாலை வரவின்மைக்கான காரணங்கள் சக மாணவர்கள் பார்வையில் எனும் தலைப்பில் மலேசியாவின் ஜோகூர் மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டத்தில் அமைந்துள்ள நான்கு சமய மேல்நிலைப் பாடசாலைகளில் Suhid et al. (2012) இனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு பல விடயங்களை முன்வைக்கின்றது. இவ்

ஆய்வில் மாதிரிகளாக 16 வயதுடைய 100 மாணவர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். விசேடமாக மாதிரிகள் அனைவரும் பாடசாலைக்கு வருகை தராதராத சக மாணவர்கள் ஆவார்கள். அவர்களிடமிருந்து வினாக்கொத்து மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இவ் ஆய்வில், மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தராமை தொடர்பில் பல்வேறு காரணிகள் கண்டறியப்பட்டன. இலத்திரனியல் ஊடகமே மாணவர்கள் வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமான காரணியாக கண்டறியப்பட்டுள்ளது. இருபத்துநான்கு மணிநேரத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் கணினி விளையாட்டுகள் மாணவர்களை ஈர்ப்பதாகக் கண்டறியப்பட்டது. சோம்பல், தாமதமாக எழுதல், சக நண்பர்கள் தாக்கம், நண்பர்களின் தவறான தூண்டுதல்கள் குறைந்தளவு செல்வாக்கு செலுத்தும் காரணிகளாக அமைகின்றன. அத்துடன் பாடசாலைச் சூழலை மேம்படுத்தல் எனும் அடிப்படையில் வகுப்பறையில் மாணவர் எண்ணிக்கையைக் குறைத்தல் மற்றும் நெகிழ்வான பாடசாலை விதிமுறைகளை உருவாக்குவதன் மூலம் கற்றலுக்கான உகந்த சூழலை உருவாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைச் சேவைகளை விரிவுபடுத்துவது மாணவர்களிடையே பாடசாலை மீதான ஆர்வத்தைத் தூண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது (Suhid et al., 2012). எனவே இவை தொடர்பில் இவ் ஆய்வும் கவனத்தைச் செலுத்தியுள்ளது.

மாணவர் வரவின்மை மற்றும் பாடசாலை இடைவிலகல் காரணங்கள் எனும் தலைப்பில் துருக்கியின் Duzce மாகாணத்தில் Sahin et al., (2016), 64 பாடசாலை அதிபர்களிடம் நடாத்திய சம்பவக் கற்கை ஆய்வொன்றில் வறுமை மற்றும் குழந்தைகளைச் சிறுவயதிலேயே வேலைக்கு அல்லது பருவகால வேலைகளுக்கு அனுப்புதல் மாணவர்களைப் பாடசாலையிலிருந்து அந்நியப்படுத்துகிறது என அறியப்பட்டுள்ளது. அத்துடன் மாணவர் சார்ந்த தனிப்பட்ட காரணிகளுள் உடல்நலக் குறைவு என்பது வருகைக் குறைபாட்டிற்கு மிக முக்கியமான தனிப்பட்ட காரணியாக கண்டறியப்பட்டுள்ளது, அதுமட்டுமன்றி இணைய மையங்களுக்குச் செல்லுதல் என்பதும் வரவின்மைக்கான காரணமாக முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வு வருகை குறைபாட்டிற்குத் தண்டனை வழங்குவதை விட பாடசாலை ஆலோசனை சேவைகள் மூலம் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றது. பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவர்களுக்கு அரசுத் துறைகளுடன் இணைந்து நிதி உதவி வழங்கப்பட வேண்டும் எனவும் பாடசாலை மாணவர்களுக்குப் பிடித்த விளையாட்டு நடவடிக்கைகளை அதிகரிப்பதுடன் பாடசாலை மற்றும் பெற்றோரிடையே வலுவான தொடர்பை ஏற்படுத்தி பெற்றோர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது (Sahin et al., 2016).

இரண்டாம் நிலைக் கல்வியில் மாணவர்களின் வருகையின்மையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எனும் தலைப்பில் துருக்கி நாட்டில் Afyon kocatepe University கல்வித்துறையில் பணியாற்றும் Emine Onder எனும் ஆய்வாளரால் துருக்கி நாட்டின் Afyonkarahisar மாகாணத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள அரச உயர்நிலைப்பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வரவின்மைக்கான காரணங்களில் மாணவர் சார்ந்த காரணிகளாக பாடசாலையின் மீது பற்றுதல்

இல்லாமை, பணத்தேவைகள், பாடங்களில் விருப்பமின்மை, பாடசாலையை விட்டு விலகும் எண்ணம் மற்றும் கல்வி குறித்த எதிர்பார்ப்பு இல்லாமை போன்றவை கண்டறியப்பட்டுள்ளன (Onder, 2017).

மேல்நிலைப் பாடசாலை மாணவர்களின் வரவின்மையுடன் தொடர்புடைய காரணிகள் எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மாணவர் பாடசாலை வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக தனிநபர் காரணிகள், மாணவர்களின் சொந்த விருப்பங்கள் மற்றும் மனநிலை இதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன என அறியப்பட்டுள்ளது. கல்வி ஆர்வம் குறைவாகவுள்ள பாடங்கள் கடினமாகத் தோன்றும் போதும் அல்லது சலிப்பை ஏற்படுத்தும் போது மாணவர்கள் பாடசாலை வருவதைத் தவிர்க்கின்றனர். பாடசாலையில் கிடைக்கும் குறைந்தளவிலான கௌரவம், பதற்றம், நோய்கள் ஆகியவை மாணவர்களின் பாடசாலை வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் தனிநபர் காரணிகளாக கண்டறியப்பட்டுள்ளன (Demir & Karabeyoglu, 2015). Schmulian & Coelzee (2011) ஆகியோர் அதிக தூக்கம் மாணவர்களின் வரவின்மைக்கான பிரதான காரணங்களில் ஒன்றாக வெளிப்படுத்துகின்றனர்.

ஆரம்பநிலை வகுப்புகளில் ஏற்படும் வரவின்மை உயர்தர வகுப்புகளிலும் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகின்றன. குறைந்த சமூக - பொருளாதார நிலை கொண்ட மாணவர்களிடையே வரவின்மை அதிகமாக காணப்படுகிறது (Gottfried, 2019).

Gnanasingam & Uthayakumar (2011) ஆகியோர் கண்டாவளைப் பிரதேச பாடசாலைகளில் சமூக நிலைகளில் பிரதிகூலம் வகிக்கும் குழுவினரால் பாடசாலை இடைவிலகல் தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கண்டறியும் நோக்கில் ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளனர். அத்துடன் குடும்பத்தின் அடிப்படை வசதிகளைக் கண்டறிதல், குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை மற்றும் தாய் தந்தையரில்லாதவர்களின் இடைவிலகலைத் தூண்டிய காரணிகள் என்பவை தொடர்பிலும் ஆராய்ந்துள்ளனர். இவ் ஆய்வில் இடைவிலகலைத் தூண்டிய காரணங்களில் தனிப்பட்ட நிலை 16.7% என்ற வகையில் செல்வாக்கு செலுத்தியுள்ளமை கண்டறியப்பட்டது.

சுதாகரன் (2013) என்பவரால் சிரேஷ்ட இடைநிலை பிரிவு மாணவர்களின் பாடசாலை வரவின்மையும் கற்றல் அடைவில் ஏற்படுத்தும் செல்வாக்கு எனும் தலைப்பில் பட்டிருப்புக் கல்வி வலய போரதீவுபற்று கல்வி கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளை மையமாக வைத்து ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. மாணவர்களின் வரவின்மையால் கற்றலில் பின்தங்கிய நிலை இப் பிரதேசத்தில் காணப்படுகின்றது. மாணவர்கள் தொடர்ச்சியாக கல்வியை கற்க விருப்பம் உடையவர்களாக இருந்தபோதும் கற்றலுக்கு தேவையான வசதிகள் கிடைக்காமையால், குறைந்த வருமானம் தரும் தொழிலுக்கு செல்லவேண்டிய நிர்பந்தமுடையவர்களாகவுள்ளமையால் பாடசாலை வரவு குறைவாகவுள்ளமை இவ் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

தனுஜா (2023) என்பவர் பாடசாலை மாணவர் வரவு ஒழுங்கீனம் எனும் தலைப்பில் யாழ் வலயத்தின் யாழ்பாணக் கோட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில் மாணவர்களின் ஒழுங்கற்ற பாடசாலை வரவில் உடல் ஆரோக்கியப்பிரச்சினைகள் குறிப்பிடத்தக்க அளவு தாக்கம் செலுத்துவதாகக் குறிப்பிடுகின்றார், கைத்தொலைபேசி பாவனை, காலையில் நேரத்துடன் எழும்பும் பழக்கமற்றவர்களாக காணப்படல் போன்றவையும் ஒழுங்கற்ற வரவின் காரணமாகும் எனவும் அவர் கண்டறிந்துள்ளார். மாணவர்களின் ஆரோக்கியப் பிரச்சினைக்குரிய பரிகாரங்களாக வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவற்றை சரிப்படுத்த நலன்விரும்பிகள் மற்றும் ஏனைய அறக்கட்டளைகளின் உதவி பெற்று தீர்வு பெற முயற்சிக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது (தனுஜா, 2023).

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வானது ஓர் அளவறிசார் ஆய்வு அணுகுமுறையில் அமைந்ததாகும். ஆய்வின் பிரதேசம் கண்டி மாவட்டத்தின் வத்தேகம வலய பாததும்பர கோட்ட தழிழ் மொழி பாடசாலைகளாகும். பாததும்பர கோட்டத்தில் ஆறு தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுள் அவற்றுள் நான்கு பாடசாலைகளிலேயே உயர்தர வகுப்புகள் காணப்படுகின்றமையினால் குறித்த நான்கு பாடசாலைகளும் ஆய்வுக் குடித்தொகையாக கொள்ளப்பட்டன. குடித்தொகை அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2**

*குடித்தொகை விபரம்*

| பாடசாலை | கலை | வர்த்தகம் | உயிரியல் விஞ்ஞானம் | பௌதிக விஞ்ஞானம் | தொழில்நுட்பம் | மாணவர்கள் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஆண் | பெண் |
| A | 103 | 57 | 46 | 55 | 78 | 163 | 176 |
| B | 13 | 00 | 00 | 00 | 00 | 00 | 13 |
| C | 23 | 10 | 00 | 00 | 00 | 21 | 12 |
| D | 41 | 24 | 00 | 00 | 00 | 15 | 50 |
| மொத்தம் | 180 | 84 | 46 | 55 | 78 | 199 | 251 |

(*மூலம்.* பாதும்பர வலயக்கல்வி அலுவலகம்)

இவ் ஆய்வில் க.பொ.த உயர்தர வகுப்பில் கற்கும் 450 மாணவர்கள் ஆய்வுக் குடித்தொகையாக கொள்ளப்பட்டனர். பின்னர் குறித்த குடித்தொகை படையாக்கப்பட்டது. பாடசாலைகளில் கற்கும் உயர்தர வகுப்பு மாணவர்கள் பாடசாலைகள் வாரியாகவும், அவர்கள் கற்கும் பாடநெறிக்கமைவாகவும், பாலினத்தின் அடிப்படையிலும், குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிலிருந்தும் எழுமாற்று மாதிரி எடுப்பு அடிப்படையில் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

முதனிலைத்தரவுகளைப் பெற தரவு சேகரிப்புக் கருவியாக வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டது. மாணவர்களிடம் குறுக்குவெட்டு முறையில் மாணவர்கள் வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர் காரணிகள் (உடல்நல பிரச்சினைகள், அதிகாலை நித்திரை விட்டு எழும்புதல், தனியார் வகுப்புகளுக்கு செல்லல், வேலைக்கு செல்லல், சமூக வலைத்தளங்களின் பாவனை - மொபைல் விளையாட்டுகள்) பாடசாலை வரவின்மையில் கொண்டுள்ள செல்வாக்கினை ஆராய்வதற்கு தரமிடு அளவுகோல்களை (Likert Scale) கொண்ட ஐந்து வினாக்கள் அடங்கிய வினாக்கொத்து மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டு தரவு சேகரிக்கப்பட்டது.

இரண்டாம் நிலைத் தரவுகள், மாணவர் வருகைப் பதிவேடுகள், தினவரவு இடாப்பு என்பவற்றிலிருந்து சேகரிக்கப்பட்டு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் ஏற்பட்ட மாணவர் வரவுப்போக்கு ஆராயப்பட்டது.

தரவுப்பகுப்பாய்வுக்காக SPSS கணனி மென்பொருளின் மூலமாக ஆய்வுக் குறிக்கோள்களின் அடிப்படையில் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. வினாக்கொத்திலுள்ள நம்பகத்தன்மை சோதனை, விபரணப் பகுப்பாய்வு, ஒவ்வொரு மாறிகளுக்கும் இடையிலான தொடர்புப் பகுப்பாய்வு, குழுக்களுக்கிடையிலான வேறுபாடுகளை கண்டறிவதற்கு Independent Samples t-test பயன்படுத்தப்பட்டது. செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கண்டறிவதற்கு Multiple Regression Analysis என்பன மேற்கொள்ளப்பட்டன. பெறப்பட்ட தரவுகளும் முடிவுகளும் தேவைக்கு அமைவாக அட்டவணைகள் மூலமாக விளக்கப்பட்டுள்ளன.

**தரவுப்பகுப்பாய்வும் முன்வைப்பும்**

***உயர்தர வகுப்பு மாணவர்களின் தற்போதைய வரவுவீதப் போக்கு***

ஆய்வின் முதலாவது குறிக்கோளின் அடிப்படையில் உயர்தர வகுப்பு மாணவர்களின் தற்போதைய வரவுவீதப் போக்கு எவ்வாறு உள்ளது என கண்டறிவதற்கு இச் சோதனை நடாத்தப்பட்டது.

**அட்டவணை 3**

*மாணவர் வரவு*

| *N* | Mean | Std. Deviation |
|---|---|---|
| 181 | 3.76 | .812 |

மாணவர்கள் வாரத்தில் மூன்று தொடக்கம் நான்கு நாட்கள் பாடசாலை வருகை தருவதுடன் ($M$ = 3.76) மாணவர்களின் பாடசாலை வருகை நாட்களில் மிதமான மாறுபாடு இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது ($SD$ = 0.81). இந்த ஆய்வில் பங்கேற்ற மாணவர்களின் சராசரி பாடசாலை வருகை நாட்கள் 75.2% ஆகவுள்ளது. அதேவேளை இரண்டாம் நிலைத்தரவுகளின் அடிப்படையில் 2024ம் ஆண்டில் 61% ஆகவும் 2025ல் 60.25% வருடாந்த மாணவர் வரவு வீதம் காணப்பட்டுள்ளது. இவ் இரண்டு

தரவுகளையும் ஒப்பிட்டு ஆராயும் போது மாணவர்களின் பாடசாலை வருகை மூன்று முதல் நான்கு நாட்கள் இருப்பது தெளிவாகிறது. அதாவது வாரத்திற்கு 3.76 நாட்கள் வருகை என்பதும், மொத்தமாக 60.63% வரவு வீதம் என்பதும் மாணவர்களின் பாடசாலை வரவின்மையை உறுதிப்படுத்துகின்றது. இதன் மூலம் இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்ட முதன்மை தரவுகளின் நம்பகத்தன்மை மேலும் வலுப்படுகின்றது.

***வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் குழுக்களுக்கிடையிலான வேறுபாடுகள்***

ஆய்வின் இரண்டாவது குறிக்கோளின் அடிப்படையில் மாதிரிகளின் பால்ரீதியான காரணிகளின் சராசரியில் வேறுபாடுகள் காணப்படுகின்றதா என கண்டறிவதற்காக independent samples t-test மேற்கொள்ளப்பட்டது.

***செவ்வன் பரம்பல்***

மொத்த மாதிரி அளவு (N = 181) ஆகவும், குழுக்கள் ஒவ்வொன்றிலும் (N > 50) அதிகமாக இருப்பதால் Central Limit Theorem அடிப்படையில் sample mean distribution normal distribution ஆக கருதப்பட்டது (Field, 2018). எனவே Independent Samples t-test நேரடியாகப் பயன்படுத்தப்பட்டது.

***உயர்தர மாணவர்களின் உடல்நலம் பாதிப்பு தொடர்பில் பால் வேறுபாட்டின் செல்வாக்கு***

$H_0$: உயர்தர மாணவர்களின் உடல்நலம் பாதிப்பு தொடர்பில் பால் வேறுபாடு செல்வாக்குச் செலுத்தவில்லை.

$H_1$: உயர்தர மாணவர்களின் உடல்நலம் பாதிப்பு தொடர்பில் பால் வேறுபாடு செல்வாக்குச் செலுத்துகின்றது.

**அட்டவணை 4**

*உடல்நலம் பாதிப்பில் பால்வேறுபாடு*

| Gender of the Student | *N* | Mean | Std. Deviation | Std. Error Mean |
|---|---|---|---|---|
| Girl | 105 | 3.01 | 1.28 | .124 |
| Boy | 76 | 2.96 | 1.13 | .129 |

| Levene's Test | | t-test for Equality of Means | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| *F* | Sig. | *T* | *Df* | Sig. (2-tailed) | Mean Difference | Std. Error Difference | 95% Confidence Interval of the Difference | |
| | | | | | | | Lower | Upper |
| 2.37 | .126 | .269 | .179 | .789 | .049 | -.183 | -.312 | .410 |

பெண் மாணவர்களின் இடைப்பெறுமானம் (*M* = 3.01, *SD* = 1.28) ஆண் மாணவர்களின் இடைப்பெறுமானம் (*M* = 2.96, *SD* = 1.13) என்பவற்றுக்கிடையில்

பொருண்மையான வேறுபாடு காணப்படாமையினால் ($F = 2.37$, $p > .05$, $t = .26$) சூனியக் கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

***உயர்தர மாணவர்களின் அதிகாலை எழுந்திருப்பது தொடர்பில் பால் வேறுபாட்டின் செல்வாக்கு***

$H_0$: உயர்தர மாணவர்களின் அதிகாலை எழுந்திருப்பது தொடர்பில் பால் வேறுபாடு செல்வாக்குச் செலுத்தவில்லை.

$H_1$: உயர்தர மாணவர்களின் அதிகாலை எழுந்திருப்பது தொடர்பில் பால் வேறுபாடு செல்வாக்குச் செலுத்துகின்றது.

**அட்டவணை 5**

*அதிகாலை எழுந்திருப்பதில் சிரமம்*

| Gender of the Student | *N* | Mean | Std. Deviation | Std. Error Mean |
|---|---|---|---|---|
| Girl | 104 | 2.10 | 1.16 | .114 |
| Boy | 75 | 2.55 | 1.44 | .166 |

| Levene's Test | | t-test for Equality of Means | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| *F* | Sig. | *t* | *Df* | Sig. (2-tailed) | Mean Difference | Std. Error Difference | 95% Confidence Interval of the Difference | |
| | | | | | | | Lower | Upper |
| 7.88 | .006 | -2.24 | 138.23 | .027 | - .45 | .20 | - .85 | - .05 |

பெண் மாணவர்களின் இடைப்பெறுமானத்திற்கும் ($M = 2.10$, $SD = 1.16$) ஆண் மாணவர்களின் இடைப்பெறுமானத்திற்கும் ($M = 2.55$, $SD = 1.44$) இடையில் பொருண்மையான வேறுபாடு காணப்படுவதால் சூனியக் கருதுகோள் நிராகரிக்கப்பட்டு மாற்றுக் கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது ($F = 7.88$, $p < .05$, $t = -2.24$).

***உயர்தர மாணவர்களின் தனியார் வகுப்புகளுக்குச் செல்லல் தொடர்பில் பால் வேறுபாட்டின் செல்வாக்கு***

$H_0$: உயர்தர மாணவர்களின் தனியார் வகுப்புக்களுக்குச் செல்லல் தொடர்பில் பால் வேறுபாடு செல்வாக்குச் செலுத்தவில்லை.

$H_1$: உயர்தர மாணவர்களின் தனியார் வகுப்புக்களுக்குச் செல்லல் தொடர்பில் பால் வேறுபாடு செல்வாக்குச் செலுத்துகின்றது.

**அட்டவணை 6**

*தனியார் வகுப்புகளுக்கு செல்லலில் பால் வேறுபாடு*

| Gender of the Student | *N* | Mean | Std. Deviation | Std. Error Mean |
|---|---|---|---|---|
| Girl | 105 | 1.41 | .90 | .09 |
| Boy | 76 | 2.04 | 1.22 | .14 |

| Levene's Test | | t-test for Equality of Means | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| *F* | Sig. | *t* | *Df* | Sig. (2-tailed) | Mean Difference | Std. Error Difference | 95% Confidence Interval of the Difference | |
| | | | | | | | Lower | Upper |
| 11.42 | .001 | -3.83 | 130.90 | .001 | -.63 | .17 | -.96 | -.30 |

பெண் மாணவர்களின் இடைப்பெறுமானத்திற்கும் ( $M$ = 1.41, $SD$ = 0.90 ) ஆண் மாணவர்களின் இடைப்பெறுமானத்திற்கும் ( $M$ = 2.04, $SD$ = 1.22 ) இடையில் பொருண்மையான வேறுபாடு காணப்படுவதால் ( $F$ = 11.42, $p < .05$, $t$ = -3.82 ). சூனியக் கருதுகோள் நிராகரிக்கப்பட்டு மாற்றுக் கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

***உயர்தர மாணவர்களின் தனியார் வேலைக்குச் செல்லல் தொடர்பில் பால் வேறுபாட்டின் செல்வாக்கு***

$H_0$: உயர்தர மாணவர்களின் தனியார் வேலைக்குச் செல்லல் தொடர்பில் பால் வேறுபாடு செல்வாக்குச் செலுத்தவில்லை.

$H_1$: உயர்தர மாணவர்களின் வேலைக்குச் செல்லல் தொடர்பில் பால் வேறுபாடு செல்வாக்குச் செலுத்துகின்றது.

**அட்டவணை 7**

*வேலைக்கு செல்லுதலில் பால் வேறுபாடு*

| Gender of the Student | N | Mean | Std. Deviation | Std. Error Mean |
|---|---|---|---|---|
| Girl | 105 | 1.04 | .24 | .02 |
| Boy | 76 | 1.36 | .71 | .08 |

| Levene's Test for | | t-test for Equality of Means | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| F | Sig. | t | Df | Sig. (2-tailed) | Mean Difference | Std. Error Difference | 95% Confidence Interval of the Difference | |
| | | | | | | | Lower | Upper |
| 85.09 | .001 | -3.77 | 87.32 | .001 | - .32 | .08 | - .49 | - .15 |

பெண் மாணவர்களின் இடைப்பெறுமானத்திற்கும் (*M* = 1.04, *SD* = .24) ஆண் மாணவர்களின் இடைப்பெறுமானத்திற்கும் இடையில் (*M* = 1.36, *SD* = .71) பொருண்மையான வேறுபாட்டைக் கொண்டுள்ளதால் ($F$ = 85.09, $p < .05$, $t$ = -3.83) சூனியக் கருதுகோள் நிராகரிக்கப்பட்டு மாற்றுக் கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

***உயர்தர மாணவர்களின் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தலில் பால் வேறுபாட்டின் செல்வாக்கு***

$H_0$: உயர்தர மாணவர்களின் சமூக வலைத்தளங்களை பயன்படுத்தலில் பால் வேறுபாடு செல்வாக்குச் செலுத்தவில்லை.

$H_1$: உயர்தர மாணவர்களின் சமூக வலைத்தளங்களை பயன்படுத்தலில் பால் வேறுபாடு செல்வாக்குச் செலுத்துகின்றது.

**அட்டவணை 8**

*சமூக வலைத்தளங்களின் பாவனையில் பால் வேறுபாடு*

| Gender of the Student | *N* | Mean | Std. Deviation | Std. Error Mean |
|---|---|---|---|---|
| Girl | 105 | 1.30 | .74 | .07 |
| Boy | 75 | 1.55 | 1.06 | .12 |

| Levene's Test | | t-test for Equality of Means | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| *F* | Sig. | *t* | *Df* | Sig. (2-tailed) | Mean Difference | Std. Error Difference | 95% Confidence Interval of the Difference | |
| | | | | | | | Lower | Upper |
| 11.71 | .001 | -1.71 | 123.56 | .090 | -.24 | .14 | -.52 | .04 |

பெண் மாணவர்களின் இடைப்பெறுமானம் (*M* = 1.30, *SD* = .74), ஆண் மாணவர்களின் இடைப்பெறுமானம் (*M* = 1.55, *SD* = 1.06) என்பவற்றுக்கிடையில் பொருண்மையான வேறுபாட்டைக் கொண்டுள்ளதால் ($F$ = 11.71, $t$ = -1.71, $p > .05$) சூனியக் கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

***வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுக்கு இடையிலான இடைத்தொடர்புகள்***

ஆய்வின் மூன்றாவது குறிக்கோளின் அடிப்படையில் வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுக்கு இடையிலான இடைத்தொடர்புகளை கண்டறிவதற்காக தொடர்புப் பகுப்பாய்வு (Correlations) சோதனை நடாத்தப்பட்டது.

**அட்டவணை 9**

*வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுக்கு இடையிலான இடைத்தொடர்புகள்*

| | | உடல்நலப் பிரச்சினை | அதிகாலை எழுதல் | தனியார் வகுப்பு | வேலைக்கு செல்லல் | சமூக வலைத்தளம் |
|---|---|---|---|---|---|---|
| அதிகாலை எழுவதில் | Correlation | -.031 | | | | |
| | Sig. (2-tailed) | .680 | | | | |
| தனியார் வகுப்பு | Correlation | .065 | .055 | | | |
| | Sig. (2-tailed) | .385 | .464 | | | |
| வேலைக்கு செல்லல் | Correlation | .128 | .102 | .170* | | |
| | Sig. (2-tailed) | .086 | .175 | .022 | | |
| சமூக வலைத்தளம் | Correlation | -.040 | .183* | .262** | .151* | |
| | Sig. (2-tailed) | .591 | .014 | .000 | .042 | |
| | *N* | 180 | 178 | 180 | 180 | 180 |

*Note.* *Correlation is significant at the 0.05 level (2-tailed).

பகுப்பாய்வு சில காரணிகளுக்கிடையில் குறிப்பிடத்தக்க நேர்மறைத் தொடர்புகள் காணப்படுவதை காட்டுகின்றது. தனியார் வகுப்பு - சமூக வலைத்தளங்களின் பாவனை ($r$ = .26, $p$ < .05) தொடர்பு பொருண்மையானது. பலவீனமான நேர்த்தொடர்பு காணப்பட்டது. இதன் மூலம் மாணவர்கள் தனியார் வகுப்புகள் மற்றும் சமூக வலைத்தளங்களின் பாவனையிலும் அதிக நேரம் செலவிடும் போது வரவின்மை ஏற்படுகின்றது. தனியார் வகுப்பு - வேலைக்கு செல்லல் ($r$ = .17, $p$ < .05) தொடர்பு பொருண்மையானது. பலவீனமான நேர்த் தொடர்பு காணப்பட்டது. வேலைக்கு செல்லல் -சமூக வலைத்தளங்களின் பாவனை ($r$ = .15, $p$ < .05) தொடர்பு பொருண்மையானது. பலவீனமான நேர்த் தொடர்பு காணப்பட்டது. அதிகாலை எழுவதில் சிரமம் - சமூக வலைத்தளங்களின் பாவனை (r = .18, $p$ < .05) தொடர்பு பொருண்மையானது. பலவீனமான நேர்த் தொடர்பு காணப்பட்டது. உடல்நலப் பிரச்சினைகள் மற்றும் பிற காரணிகளுக்கிடையில் தொடர்பு ($p$ > .05) பொருண்மை அற்றது.

***வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர்சார் காரணிகள்***

ஆய்வின் நான்காவது குறிக்கோளின் அடிப்படையில் வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர்சார் காரணிகளை கண்டறிவதற்காக Multiple Regression Analysis நடாத்தப்பட்டது.

**அட்டவணை 10**

*வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர்சார் காரணிகள்*

| Model | *R* | R Square | Adjusted R Square | Std. Error of the Estimate |
|---|---|---|---|---|
| 1 | .325[a] | .105 | .079 | .773 |

| Model | Unstandardized Coefficients | | Standardized Coefficients | *t* | Sig. |
|---|---|---|---|---|---|
| | B | Std. Error | Beta | | |
| (Constant) | 4.57 | .228 | | 20.057 | .001 |
| உடல்நலப் பிரச்சினைகள் | -.071 | .048 | -.107 | -1.473 | .143 |
| அதிகாலை எழுதல் | -.011 | .046 | -.017 | -.235 | .814 |
| தனியார் வகுப்பு | -.160 | .057 | -.213 | -2.82 | .005 |
| வேலைக்கு செல்லல் | -.119 | .116 | -.077 | -1.03 | .306 |
| சமூக வலைத்தளங்களின் பாவனை | -.111 | .069 | -.122 | -1.60 | .111 |

*Note.* a சார் மாறி: மாணவர்களின் வாராந்தம் சராசரி பாடசாலை வருகை நாட்கள்

Multiple Regression சோதனையில் (*R* = .325) இது சாரா மாறிகளுக்கும் மாணவர்களின் சராசரி பாடசாலை வருகை நாட்கள் இடையே குறைந்த அளவிலான தொடர்பு இருப்பதைக் காட்டுகின்றது. ($R^2$ = .105) 5 காரணிகளும் இணைந்து 10.5% வரை மட்டுமே மாணவர்களின் வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர்சார் காரணிகளை அடையாளம் காணப்பட்டதாக Regression Model Summary பகுப்பாய்வு சோதனை விளக்குகின்றது. இது சமூக விஞ்ஞானத் துறையில் மிதமான விளக்கவியல் திறன் கொண்ட மாதிரியாக பார்க்கப்படலாம் (Cohen, 1988). இதில் தனியார் வகுப்பு (*B* = - .160, $p < .05$) மாணவர் வரவின்மையில் பொருண்மையான தாக்கத்தினைச் செலுத்துகின்றது. உடல்நலப் பிரச்சினை (*B* = - .071, $p > .05$), அதிகாலை எழுவதில் சிரமம் (*B* = - .071, $p > .05$) வேலைக்கு செல்லல் (*B* = -.119, $p > .05$), சமூக வலைத்தளங்களின் பாவனை - மொபைல் விளையாட்டுகள் (*B* = .111, $p > .05$) போன்ற காரணிகள் மாணவர் வரவின்மையில் பொருண்மையான தாக்கத்தினைச் செலுத்தவில்லை.

## முடிவுகளும் பரிந்துரைகளும்

### *பாடசாலை வருகை நாட்கள் தொடர்பான கண்டறிதல்*

முதலாவது குறிக்கோள்களின் அடிப்படையாக விபரண பகுப்பாய்வு சோதனை மூலம் வாரத்திற்கு 3.76 நாட்கள் வருகை என்பதும் இரண்டாம் நிலை தரவுகளின் சராசரி வரவு வீதம் 2024, 2025ம் ஆண்டுக்கு 60.63% என காணப்பட்டது. இந்த இரண்டு தரவுகளையும் ஒப்பிட்டு முடிவை காணும் போது மாணவர்களின் பாடசாலை வருகை மூன்று முதல் நான்கு நாட்கள் இருப்பது கண்டறியப்பட்டது.

உடல்நலம் பாதிப்பால் பாடசாலை வரவின்மை என்ற காரணி ஆராயப்பட்ட போது 181 மாதிரிகளில் 67 (37%) மாதிரிகள் தங்களது உடல்நலம் பாதிப்பு பாடசாலை வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் ஓர் சுகாதாரப் பிரச்சினை எனக்

($M$ = 2.99) குறிப்பிட்டுள்ளனர். Kearney, (2008) தனது ஆய்வில் மாணவர்களின் உடல் மற்றும் மனநலச் சிக்கல்கள் பாடசாலை வருகையை நேரடியாக பாதிக்கக்கூடியதாக இருப்பதை வலியுறுத்துகிறார். இவ் ஆய்வின் உடல்நலம் பாதிப்பினால் பாடசாலைக்கு வர முடியாத நிலை ஏற்படுகிறது என்ற காரணிக்கான பகுப்பாய்வு முடிவும் அதனை ஆதரிக்கின்றது. இது ஆரோக்கியப் பிரச்சினைகள் மாணவர்களின் பாடசாலை வரவின்மையில் புறக்கணிக்க முடியாத அளவிலான தாக்கம் செலுத்துகின்றன என்பதைக் காட்டுகின்றது.

***இரண்டாவது குறிக்கோளுக்கு அமைவாக independent samples t-test கண்டறிதல்கள்***

பெண் மாணவர்களின் இடைப்பெறுமானம் ($M$ = 3.01, $SD$ = 1.28) ஆண் மாணவர்களின் இடைப்பெறுமானம் ($M$ = 2.96, $SD$ = 1.13) என்பவற்றுக்கிடையில் பொருண்மையான வேறுபாடு காணப்படவில்லை ($F = 2.37$, $p > .05$, $t = .26$). அதிகாலை எழுந்திருப்பதில் சிரமம் பெண் ($M$=2.10, $SD$=1.16) ஆண் ($M$ = 2.55, $SD$ = 1.44, $F$ = 7.88, $t$ = -2.24, $p < .05$) இருவருக்குமிடையில் பொருண்மையான வேறுபாடு உள்ளது. இளம் வயதில் உறக்க நேரம், வாழ்க்கை முறை, மற்றும் உடலியல் மாற்றங்கள் காரணமாக அதிகாலை எழுவதில் சிரமம் அதிகரிக்கின்றது. எனவே மாணவர்களின் கல்விசார் செயல்திறன் மற்றும் உடல் - மன நலனை மேம்படுத்துவதற்காக உறக்க நேர முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்கள் தேவையானவையாக காணப்படுகின்றது (Crowley et al., 2018; Owens, 2014).

தனியார் வகுப்புகளுக்கு செல்லல் பெண் ($M$ =1.41, $SD$ = .90) ஆண் ($M$ = 2.04, $SD$ = 1.22) இருவருக்குமிடையில் தனியார் வகுப்புகளுக்கு செல்வதால் வரவின்மை காரணியின் இடைப்பெறுமானத்தில் வேறுபாடு காணப்படுகின்றது ($F$ = 11.42, $p < .05$, $t$ = 3.83). தனியார் கல்வி நிலையங்கள் அதிக நேரம் நடைபெறுவதால் மாணவர்கள் களைப்படைந்து பாடசாலை வருகை மற்றும் பாடசாலைச் செயல்பாடுகளில் ஈடுபடுவதில் குறைவு என்பன ஏற்படுகின்றது. எனவே பாடசாலை கல்வி மற்றும் தனியார் கல்வி நிலையங்களுக்கிடையிலான சமநிலையைப் பேணுவதற்கான கல்விக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அவசியமானவை (Bray, 2013; Bray & Kwo, 2014).

வேலைக்கு செல்லுதல் பெண் ($M = 1.04, SD = .24$) ஆண் ($M = 1.36$, $SD = .71$) மாணவர்களிடையே பொருண்மையான வேறுபாடு உண்டு ($F$ = 85.09, $t$ = -3.83, $p < .05$). இத்தகைய நிலைமை பல சமூகங்களில் பொருளாதார மற்றும் குடும்ப சூழ்நிலைகளால் மாணவர்கள் கல்வியுடன் வேலை அல்லது குடும்பப் பொறுப்புகளை ஏற்க வேண்டிய கட்டாயத்தை அதிகளவில் ஆண் மாணவர்களிடம் ஏற்படுத்துகிறது, இதனால் அவர்களின் பாடசாலை வருகை மற்றும் கல்விசார் ஈடுபாடு பாதிக்கப்படுகின்றது (Staff et al., 2010; UNESCO, 2015).

சமூக வலைத்தளங்களின் பாவனை - மொபைல் விளையாட்டுகள் பெண் ($M$ = 1.30, $SD$ = .74) ஆண் ($M$ = 1.55, $SD$ = 1.06 ) மாணவர்களிடையே பொருண்மையான வேறுபாடு இல்லை ( $F$ = 11.71, $t$ = -1.71, $p > .05$ ). சமூக


ஊடகங்களின் அதிகப்படியான பயன்பாடு மாணவர்களின் கல்விசார் ஈடுபாடு, பாடசாலை வரவின்மையில் பாதிக்கக்கூடும் அதனால் பாலின வேறுபாடு குறிப்பிடத்தக்கதாக இல்லாவிட்டாலும் சமூக ஊடகங்கள் மற்றும் மொபைல் விளையாட்டுகளின் பயன்பாட்டை சீராகக் கட்டுப்படுத்துதல் மாணவர்களின் கல்வி, பாடசாலை வரவு மீதான ஆர்வத்தை மேம்படுத்தும் (Kuss & Griffiths, 2017; Twenge & Campbell, 2018).

***மூன்றாவது குறிக்கோளுக்கு அமைவாக தொடர்புப் பகுப்பாய்வு சோதனையில் (Correlations) கண்டறிதல்கள்***

தனியார் வகுப்புக்கள் - சமூக வலைத்தளப் பாவனை ($r$ = .26, $p$ < .05 ) தனியார் வகுப்பு-வேலைக்கு செல்லல் ($r$ = .17, $p$ < .05) வேலைக்குச் செல்லல்-சமூக வலைத்தளங்கள் ($r$ = .15, $p$ < .05) அதிகாலை எழுதல் - சமூக வலைத்தளப் பாவனை (r = .18, $p$ < .05 ) ஆகிய காரணிகளிடையே பொருண்மையான நேர்த்தொடர்பும் இருப்பது வெளிப்படுத்தப்பட்டது. உடல்நலப் பிரச்சினைகள் ($p$ > .05) பொருண்மை அற்ற தனித்துவமான காரணியாக அடையாளம் காணப்பட்டது. இதனால் மாணவர்சார் காரணிகள் ஒருங்கிணைந்து மாணவர்கள் பாடசாலை வரவின்மையில் தாக்கத்தை ஏற்படுத்தும் (Bray, 2013; Twenge & Campbell, 2018). உடல்நலப் பிரச்சினைகள் மற்றும் பிற காரணிகளுக்கிடையில் ($p$ > .05) தொடர்பு பொருண்மை அற்றது. இதன் மூலம் உடல்நல காரணிகள் தனித்துவமான காரணியாக செயல்படக்கூடும் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

**நான்காவது ஆய்வுக் குறிக்கோளுக்கு அமைவாகவும் பின்னடைவுப் பகுப்பாய்வுச் சோதனை**

Multiple Regression Analysis முடிவுகள் மூலமாக தனியார் வகுப்பு காரணிகள் ($B$ = - .160, $p$ < .05) பொருண்மையான வேறுபாட்டைக் கொண்டுள்ள அதேவேளை. ஏனைய காரணிகள் ($p$ > .05) பொருண்மையான வேறுபாட்டைக் கொண்டிருக்கவில்லை.




உயர்தர வகுப்பு மாணவர்கள் வரவின்மையில் செல்வாக்குச் செலுத்தும் மாணவர்சார் காரணியாக தனியார் வகுப்புகளுக்கு செல்லல் கண்டறியப்பட்டுள்ளது. இக் கண்டறிதலை மாணவர்களின் வரவினை அதிகரித்தல் மற்றும் பாடசாலை நேரத்தில் ஆசிரியர்களால் நிதி அறவீடு செய்து பிரத்தியேக வகுப்புக்களில் கற்பிப்பதனை தடுத்தல் எனும் சுற்றுநிருபம் மேலும் வலுச்சேர்கின்றது (MOE, 2005). கல்வி ஆய்வுகளில் குறிப்பிடப்படும் “Shadow Education” என்ற கருத்துடன் ஒத்துப்போகிறது. Shadow education என்பது பாடசாலைக்குப் புறம்பாக நடைபெறும் தனியார் பயிற்சி வகுப்புகள் குறிப்பாக மாணவர்கள் தனியார் வகுப்புகளுக்காக அதிக

நேரம் செலவிடும் போது பாடசாலை வரவின்மை மற்றும் பாடசாலைச் செயல்பாடுகளில் ஈடுபாடு குறையக்கூடும் (Bray, 2013).

தனியார் பயிற்சி வகுப்புகள் மாணவர்களின் கல்வி செயல்திறனை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்டாலும் அவை பாடசாலை கல்வியுடன் போட்டியிடும் நிலை ஏற்படும் போது பாடசாலை வருகை மற்றும் ஈடுபாட்டில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் மாணவர்கள் பாடசாலை கல்வியை விட தனியார் வகுப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் நிலை உருவாகும் (Bray & Kwo, 2014). இந்த ஆய்வின் பெறுபேறுகள் மாணவர்களின் பாடசாலை வருகையை மேம்படுத்துவதற்காக பாடசாலை கல்வி மற்றும் தனியார் பயிற்சி வகுப்புகளுக்கிடையிலான சமநிலையை பராமரிக்கும் கல்விக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அவசியமானவை என்பதைக் காட்டுகின்றது. குறிப்பாக மாணவர்களின் நேர முகாமைத்துவம், கல்வி ஈடுபாடு மற்றும் பாடசாலைப் பங்கேற்பை மேம்படுத்தும் திட்டங்கள் கல்வி முறைமையில் முக்கியத்துவமாக அமைய வேண்டும்.

**பரிந்துரைகள்**

இவ் ஆய்வு தனியார் கல்வி நிலையங்கள் மாணவர்களின் பாடசாலை வருகைவீதத்தையும் ஏனைய பாடசாலை செயற்பாடுகளையும் பாதிக்காத வகையில் தமது நேர அட்டவணைகளைத் திட்டமிடல் வேண்டும் எனப் பரிந்துரை செய்கின்றது. அத்துடன் அரசாங்கம் பொருத்தமான கல்விக் கொள்கைகளை வகுப்பதன் மூலம் மாணவர்களின் சமூக வலைத்தளங்களின் பாவனை மற்றும் மொபைல் விளையாட்டுக்களைக் கட்டுப்படுத்தமுடியும் எனவும் கருதுகின்றது.

மேலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படாதவாறு வழிப்படுத்த முறைமைப்படுத்தப்பட்ட வழிகாட்டல் ஆலோசனைகளை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தல் வேண்டும். பாடசாலை அடிப்படையிலான சுகாதார செயற்பாட்டு அமைப்புகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பாடசாலைகளில் தொடர்ச்சியான சுகாதார பரிசோதனைகளைச் செயற்படுத்த முடியும். இதன் மூலம் கண்டறியப்படும் மாணவர்களின் சுகாதாரம் தொடர்பான தகவல்களைப் பெற்றோருடன் பகிர்வதன் மூலம் குடும்ப ஆதரவு வலுப்படுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக நீடித்த நோய்களைக் கொண்ட மாணவர்களுக்கு தனிப்பட்ட கண்காணிப்பு முறை உருவாக்கப்பட வேண்டும் என்பதுடன், சுகாதார விழிப்புணர்வுத் திட்டங்கள் மூலம் மாணவர்களுக்கு தனிநபர் சுகாதாரம், உணவு பழக்கம், தூக்க ஒழுங்கு, உடற்பயிற்சி ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கவேண்டும். உடல்நலக்குறைவுக் காரணங்களால் பாடசாலைக்கு வர முடியாத மாணவர்களுக்கு வீட்டிலிருந்து சுய கற்லில் ஈடுபடுவதற்கான வழிகாட்டல்கள் வழங்குவதுடன் டிஜிட்டல் கற்றல் சாதனங்களை பெற்றுக்கொடுப்பதன் மூலம் சுயகற்றலை ஊக்குவிக்கமுடியும். இருப்பினும் இது தொடர்பில் உரிய வழிகாட்டல்கள் கவனத்துடன் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**உசாத்துணைகள்**


Balfanz, R., & Byrnes, V. (2012). The importance of being in school: A report on absenteeism in the nation's public schools. Johns Hopkins University Center for Social Organization of Schools.

Bray, M. (2013). Shadow education: Comparative perspectives on the expansion and implications of private supplementary tutoring. *Procedia - Social and Behavioral Sciences, 77,* 412–420

Bray, M., & Kwo, O. (2014). Regulating private tutoring for public good: Policy options for supplementary education in Asia. *Comparative Education Research Centre, University of Hong Kong.*

Cohen, J. (1988). *Statistical power analysis for the behavioral sciences* (2nd ed.). Lawrence Erlbaum Associates.

Crosnoe, R., Johnson, M. K., & Elder, G. H. (2010). *School size and the interpersonal side of education: An examination of race/ethnicity and organizational context*. *Social Science Quarterly, 91*(1), 224–243.

Crowley, S. J., Wolfson, A. R., Tarokh, L., & Carskadon, M. A. (2018). An update on adolescent sleep: New evidence informing the perfect storm model. *Journal of Adolescence, 67*, 55–65.

Demir, K., & Akman Karabeyoglu, Y. (2015). *Academic stress and school absenteeism among high school students: A Turkish sample*. *Educational Studies, 41*(3), 237–250.

Field, A. (2018). *Discovering Statistics Using IBM SPSS Statistics* (5th ed.). London: Sage Publications.

Gottfried, M. A. (2014). Chronic absenteeism and its effects on students' academic and nonacademic outcomes. *Journal of Education for Students Placed at Risk (JESPAR), 19*(2), 53–75.

Gottfried, M. A. (2019). Chronic absenteeism in the classroom context:Relationships with student engagement, achievement, and social factors. *American Educational Research Journal*, *56*(3), 1235–1262.

Gnasingam, K., & Uthayakumar, S (2011). கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் மாணவர் இடைவிலகல்., யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Kearney, C. A. (2008). School absenteeism and school refusal behavior in youth. *Clinical Psychology Review*, *28*(3), 451–471.

Kuss, D. J., & Griffiths, M. D. (2017). Social networking sites and addiction: Ten lessons learned. *International Journal of Environmental Research and Public Health, 14*(3), 311.

Ministry of Education, Sri Lanka. (2019). *Education sector development plan 2018–2025*. Colombo: MoE.

Naylor, R. (2001). Dropping out of school Factors and consequences. Oxford University Press.

Onder, E. (2017). Student Absenteeism in Secondary Education, Absenteeism Related School practices and Recommended Policies., Education and Science.

Owens, J. A. (2014). Insufficient sleep in adolescents: Causes and consequences. *Pediatrics, 134*(3), e921–e932.

Sahin, S., Arseven, Z & Kilic, A. (2016). Causes of Student Absenteeism and Dropouts. *International Journal of Instruction.*

Schmulian, A., & Coetzee, S. (2011). Class absenteeism: Reasons for non-attendance and the effect on academic performance. *Accounting Research Journal, 24(2), 178–194.*

Staff, J., Schulenberg, J. E., & Bachman, J. G. (2010). Adolescent work intensity, school performance, and academic engagement. *Sociology of Education, 83*(3), 183–200.

Suhid, A. Ismail, N., & Kassim, A. (2012). *Factors affecting school attendance among secondary school students in Malaysia*. Journal of Educational Research, *5*(2), 45–55.

Suhid, A. Rahman, A. & Kamal, N. (2012). Factors causing Student Absenteeism According to Peers. *International Journal* University Putra Malaysiya.

Twenge, J. M., & Campbell, W. K. (2018). Associations between screen time and lower psychological well-being among children and adolescents. *Preventive Medicine Reports, 12*, 271–283.

UNESCO. (2015). *Education for All 2000–2015: Achievements and Challenges*. Paris: UNESCO Publishing

தனுஜா, டி. (2023). பாடசாலை மாணவர் வரவு ஒழுங்கீனம்., யாழ்ப்பாணப் *பல்கலைக்கழகம்.*

சுதாகரன், இ. (2023). சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு மாணவர்களின் பாடசாலை வரவின்மை கற்றல் அடைவில் ஏற்படுத்தும் தாக்கம்., *கிழக்குப் பல்கலைக்கழகம்.*

கல்வி அமைச்சு, (2005). சுற்றுநிருபம் மாணவர்களின் வரவினை அதிகரித்தல் மற்றும் பாடசாலை நேரத்தில் ஆசிரியர்களால் நிதி அறவீடு செய்து பிரத்தியேக வகுப்புக்களில் கற்பிப்பதனை தடுத்தல்.